**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1**
**இராமநாதபுரம்.**

**முன்னிலை :** திரு.ஜெ.ஹரிஹரசுதன். B.A., LLB., (Hons)
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09-ம் நாள் செவ்வாய்கிழமை

**Crl. M. P. No.517/2026**

**CNR NO. TNRM 02-001511-2026**

கோபாலகிருஷ்ணன்,
த/பெ. வேலு.

. . . மனுதாரர்

// எதிர் //

காவல்நிலைய பொறுப்பு அதிகாரி,
உத்திரகோசமங்கை காவல் நிலையம்,
குற்ற எண். 22/2026
U/Sec. 4(1)(A), 14(A) TNP Act

. . . எதிர்மனுதாரர்

இம்மனுவானது 25.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.இராமமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**உ த் த ர வு**

இம்மனுவானது பிரிவு 497 of BNSS ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள TN 65 BD 4647 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் காவல்நிலையம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் பின்னர் அந்த வாகனத்தை மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கவும் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.** இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு ஆவணங்கள் மற்றும் போலீசாரின் பதிலை பரிசீலனை செய்யும்போது மேற்படி குற்ற வழக்கில் TN 65 BD 4647 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மதுபானபாட்டில்கள் கொண்டு சென்றதாக இருசக்கர வாகனமானது போலீஸாரால்

கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அது நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படாமல் உள்ளது என்றும் தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர்தான் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்று தெரிவித்து. மேற்படி வாகனத்தின் உரிமை ஆவணத்தின் நகலையும், மனுதாரரின் ஆதார் அட்டை நகலையும் தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி வாகனமானது காவல்நிலையத்தில் வெயிலிலும், மழையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் அதில் வெயில், மழை, காற்று ஆகியவைகளினால் பாதிக்கப்பட்டு வாகனத்தை மனுதாரர் பயன்படுத்த இயலாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்றும், நீதிமன்றம் விதிக்கும் கட்டளைகளை மனுதாரர் பின்பற்றுவார் என்றும், மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரருக்கு மிகுந்த கஸ்டமும் நஸ்டமும் உண்டாகும் என்றும் வாதிட்டார். அரசு தரப்பில் வாகனம் அரசுடமையாக்கப்படுவதற்காக மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு நடைமுறை நிலுவையில் இருந்து வருகிறது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

**2.** வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து பார்க்கையில் மனுதாரர் இந்த வழக்கில் எதிரி என்பதையும், அவரிடமிருந்துதான் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என்பதையும், அறியமுடிகிறது. அரசு தரப்பில் வாகனமானது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 14ன் படி உரிய அதிகாரியிடம் அரசுடமையாக்கப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டு நடைமுறை நிலுவையில் இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதையும், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 14ஐயும் கவனமாக கருத்தில்கொண்டு பார்க்கும்போது தற்போது இம்மனுவில் வேண்டப்பட்டுள்ளதான வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவோ மற்றும் மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கவோ உத்தரவிடுவது தகுந்ததாக இருக்காது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர் அரசுடமையாக்கப்படும் நடவடிக்கையில் உரிய அதிகாரியின்பொருட்டு ஆஜராகி வாகனத்தை பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தி இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 09–ம் நாள் செவ்வாய்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.06.09 17:52:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.